காரணம், அரூரில் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்காக அப்படிச் சொன்னேன். ஆனால் உண்மை நிலையைச் சொல்ல வேண்டுமென்றால் தமிழ்நாட்டில் எங்கேயும் அரசாங்கத்தின் சார்பில் பாலிடெக்னிக் அமைக்கிற உத்தேசம் இல்லை. அதே போல் என்ஜினியரிங் கல்லூரி கூட நாம் ஆரம்பிப்பதாக இல்லை. சென்னையில் மட்டும் ஒன்று ஆரம்பிக்கலாமா என்ற ஒரு எண்ணம் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதுகுறித்து இன்னும் முடிவு எடுக்கவில்லை.

உதகமண்டலத்தில் உள் விளையாட்டு அரங்கம்.

784—(*வினா எண் 6225) திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலத்தில் உள் விளையாட்டு அரங்கம் (Indoor Stadium) அமைக்கக் கோரிக்கை மனு ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ): உதகமண்டலத்தில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே அப்படிப்பட்ட கோரிக்கை எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. உச்சி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது குதிரைப் பந்தய மைதானத்தை அரசு ஏற்றுக் கொண்டிருப்பதால் அங்கே உலக அரங்கில் ஒரு பெரிய விளையாட்டு மைதானத்தை ஏற்படுத்தப் போவதாக நேற்று சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதையனுசரித்து அங்கே ஒரு பெரிய ஸ்டேடியம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதை அரசாங்கம் பரிசீலித்து தக்க முடிவு எடுக்கும்.

தொழுநோய் ஒழிப்புத் திட்டம்.

785—(*வினா எண் 2847) திரு. எம். செல்லமுத்து; திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழுநோய் ஒழிப்பு பற்றி மத்திய அரசுகால இலக்கு நிர்ணயித்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) தொழுநோயை ஒழிப்பதற்கு மத்திய அரசு கி.பி. 2,000 ஆம் ஆண்டை இலக்காக நிர்ணயம் செய்துள்ளது.

திரு. கோ. வீரய்யன்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கி.பி. 2000-ம் ஆண்டை இலக்காக வைத்திருந்தாலும் நமது மாநில அரசு அதற்கு ஏதாவது இலக்கு வைத்து அந்தப் பணியைத் தொடங்க இருக்கிறதா ? அவற்றின் விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழுநோயைப் பொறுத்தவரையில் மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து நடைமுறைப்படுத்திக் கொண்டுவருகிற ஒரு திட்டமாகும். 1979—80ல் நான்-ப்ளான் எக்ஸ்பென்டிச்சராக தமிழக சர்க்கார் செலவு செய்திருக்கிற தொகை ரூ. 1,79,80,000. அதேமாதிரி ரூ. 7,35,000 ப்ளான் எக்ஸ்பென்டிச்சரில் மத்திய அரசு கொடுக்கிற தொகை. 1985-க்கு ரூ. 3,25,29,000 தமிழக சர்க்கார் செலவு செய்தது. அதே நேரத்தில் மத்திய அரசு ரூ. 27,96,000 செலவழித்தது. ஆகவே, இம்மாதிரி படிப்படியாக இந்தத் தொழுநோய் ஒழிப்பிற்காக தமிழக சர்க்காரும் மத்திய சர்க்காரும் சேர்ந்து செலவழித்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால், மத்திய சர்க்கார் அகில இந்திய ரீதியில் ஒரு இலக்கை வைத்திருக்கிறார்கள். தமிழக சர்க்காரைப் பொறுத்தமட்டில் இதைத் தீவிரமாக நடைமுறைப்படுத்திக்கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழுநோய் ஒழிப்புப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாநிலம் முழுவதும் தொழுநோய் எவ்வளவு பேர்களுக்கு இருக்கிறது என்று சென்ஸஸ் ஏதாவது எடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, 1980-ல் 97,60,000 பெர்ஸன்ஸ்-யை நாம் பரிசோதனை செய்து 29,968 பேர்களுக்கு இருக்கிறது என்று கண்டு பிடித்து இருக்கிறோம். 1985-ம் ஆண்டு 1,45,51,000 பேர்களை பரிசோதனை செய்து 28,821 பேர்களுக்கு இருக்கிறது என்று கண்டு பிடித்திருக்கிறோம். ஆக, இன்ஸிடன்ஸ் இவ்வ

ளவு கேஸ்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த இன்ஸிடன்ஸ் 1980-ல் 1,000க்கு 3 என்றிருந்தது 1985-ல் 1000-க்கு 2 என்ற அளவிற்கு குறைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

786—(*வினா எண் 6668) திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் சிவகிரி பகுதியில் தொழுநோய் அதிகமாக உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) சிவகிரியில் ஒரு தொழுநோய் சிகிச்சை மையத்தோடு சங்கரன்கோவிலிலும் புதிய கட்டிடம் கட்டப்பட்டு தொழுநோய்க் கான சிகிச்சை அளிக்கப்படுகிறது.

(முற்பகல் 9–30)

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகத் தில்தான் அதிகமாக தொழுநோய் இருக்கின்றது என்று சொல் லப்படுகின்றது. அதிலும் குறிப்பாக கொடிக்கால் வெற்றிலை விளைகின்ற இடங்களிலேதான் இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் சிவகிரியிலும், சேலம் மாவட்டத்தில் ஆத்தூரிலும் இந்தத் தொழுநோய் அதிகமாக இருப்பதற்குக் காரணம் இந்த கொடிக்கால் வெற்றிலை விளைகின்ற இடங்களிலே பணி செய் வதால்தான் என்ற கருத்து நிலவுகிறது. இதை அரசு அறிந் திருக்கிறதா அரசு இதற்காக ஆராய்ச்சி ஏதேனும் ஏற்படுத்தி யுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக தனியாக ஆராய்ச்சி எதுவும் செய்யப்பட வில்லை என்றாலும், திருநெல்வேலி மாவட் டத்தைப் பொறுத்த வரையில், ''பிரிவெலன்ஸ்'' எவ்வளவு பேருக்கு தொழுநோய் இருக்கின்றது என்பதைப் பார்க்கின்ற நேரத்திலே 1,000-க்கு 9.1 தான் இருப்பதாகத் தெரி கின்றது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஆயிரத்திற்கு 13.8 அளவிற்கு உள்ளது. ஆகவே, தமிழகத்திலே இருக்கின்ற சராசரியைவிட திருநெல்வேலி மாவட்டத்தில் குறை